1974 மார்ச் 11]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த அலுவலகம் எங்கே செயல் பட இருக்கிறது. புதிய கட்டிடம் கட்டப் போகிறதா ? எற்கனவே இருக் கிற கட்டிடத்தில் நீடிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது புதிய கட்டிடத்தைப் பற்றி திட்டம் எதுவும் இல்லை.

சென்னையிலுள்ள நினைவுச் சின்னங்கள்.

*364 வினா—திரு. ரா. ரா. (முனுசாமி :
திருமதி த. ந. அனந்தநாயகி) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகர பொதுச்சாலைகளில் எத்தனை நினைவுச் சின்னங்கள் எங்கெங்கே உள்ளன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: விவரப்பட்டியல் @ சட்டப் பேரவையின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

திரு. எஸ். வடிவேலு : நம்மை அடிமைப்படுத்தியிருந்த ஆங்கிலேயர் கள் சிலைகளை அகற்றிவிட்டு, சுதந்தர வீரர்கள் சிலைகளை அங்கங்கே வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : படிப்படியாக அந்த வேலை நடைபெற்று வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : ஆங்கிலேயர்கள் என்றாலும் கூட—ஜி.யூ. போப், அன்னிபெசன்ட் போன்றவர்கள் நம்முடைய சமுதாயத்திற்கு வாழ் வளித்தவர்கள். அவர்களின் சிலைகள் நீங்கலாக, மன்றோ சிலை, எழாம் எட்வர்ட் சிலை போன்றவற்றை எல்லாம் அகற்றி அங்கே நம்முடைய சமுதாயத்திற்கு வாழ்வளித்தவர்கள் சிலைகளை நிறுவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்போது இல்லை.

திரு. அ. பெ. சீனிவாசன் : சென்னை நகரத்தில்—பொதுவாக தமிழ் நாட்டிலே—சிலைகளின் எண்ணிக்கை பெருகிவிட்டது. ஆகவே இந்தச் சிலைகளுக்கு ஒரு கட்டுப்பாடு ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. பெ. தர்மலிங்கம் : இல்லை.

@ 110—115-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.